பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

16 06 2024 **SUNDAY** 12 40 **PM**

வணக்கம். ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி, மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்கிபாத் நிகழ்ச்சி, அகில இந்திய வானொலியில் வரும் 30ஆம் தேதி ஒலிபரப்பாகிறது.

2. ஜம்மு காஷ்மீரின் பாதுகாப்பு சூழல் குறித்து மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தலைமையில் உயர்நிலைக் குழுக் கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெற்றது.

3. விவசாயிகளின் நலனுக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளதாக வேளாண் துறை அமைச்சர் திரு. சிவராஜ்சிங் சௌஹான் கூறியுள்ளார்.

4. சென்னை அகில இந்திய வானொலி 86-ஆண்டுகளை பூர்த்தி செய்து, 87-வது ஆண்டில் இன்று அடியெடுத்து வைத்துள்ளது.

5. இந்தியா – தென்னாப்பிரிக்கா இடையேயான முதலாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று பெங்களூருவில் நடைபெறுகிறது.

**>>>><<<<**

பிரதமர் திரு. நரேந்திர மோடி, மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்கிபாத் நிகழ்ச்சி, அகில இந்திய வானொலியில் வரும் 30ஆம் தேதி காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமரின் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது. இது இரவு மணி 8 மணிக்கு ஒலிபரப்பும் செய்யப்படுகிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள வானொலி நிலையங்கள் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமராக தொடர்ந்து மூன்றாவது முறையாக பொறுப்பேற்ற பின்னர் திரு. நரேந்திர மோடி ஆற்றும் முதலாவது மன்கிபாத் உரை இதுவாகும்.

இந்த நிகழ்ச்சியில் இடம்பெறவேண்டிய அம்சங்கள் குறித்து பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை தெரிவிக்கலாம் என்று மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

1 8 0 0 1 1 7 8 0 0 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண் வாயிலாகவும், **Namo** கைபேசி செயலி வாயிலாகவும் கருத்துக்களை வரும் 28ஆம் தேதிவரை தெரிவிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**>>>><<<<**

ஜம்மு காஷ்மீரின் பாதுகாப்பு சூழல் குறித்து மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தலைமையில் உயர்நிலைக் குழுக் கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெற்றது.

அமர்நாத் யாத்திரைக்கான முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்தும் இக்கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தோவல், ஜம்மு காஷ்மீர் துணைநிலை ஆளுநர் திரு. மனோஜ் சின்ஹா மற்றும் உயரதிகாரிகள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

**>>>><<<<**

விவசாயிகளின் நலன்களை பாதுகாப்பதற்கு பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளதாக வேளாண் துறை அமைச்சர் திரு. சிவராஜ்சிங் சௌஹான் கூறியுள்ளார்.

செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்த அவர், கடந்த பத்தாண்டுகளாக விவசாயிகள் நலனுக்காக நிறைவேற்றப்பட்ட திட்டங்களை பட்டியலிட்டார்.

மகளிர் மேம்பாட்டிற்கான திட்டங்களுக்கும் மத்திய அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாக திரு. சிவராஜ்சிங் சௌஹான் கூறினார்.

**>>>><<<<**

நீட் விவகாரத்தில் மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான், மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுடன் ஆக்கபூர்வமான பேச்சுக்களை நடத்தியுள்ளதாக ஜவுளித்துறை அமைச்சர் திரு. கிரிராஜ் சிங் கூறியுள்ளார்.

பீகாரின் **Begusarai**–ல் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த பிரச்சினையில் ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு மறுதேர்வு நடத்துவதற்கான முடிவு, அவர்களின் விருப்பத்தின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டதாக தெரிவித்தார்.

**>>>><<<<**

சத்திஷ்கரில் நக்ஸலைட்டுகள் நடத்திய தாக்குதலில் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் இரண்டு பாதுகாப்புப்படை வீரர்களை அம்மாநில முதலமைச்சர் திரு. **Vishnu Deo Sai** இன்று நேரில் சந்தித்து அவர்களின் உடல்நிலை குறித்து விசாரித்தார்.

ராய்ப்பூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், **Narayanpur** மாவட்டத்தில் நிகழ்ந்த இச்சம்பவத்தில் பாதுகாப்புப்படை வீரர் ஒருவர் உயிர்த்தியாகம் செய்ததாக கூறினார்.

காயமடைந்து சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தேவையான அனைத்து மருத்துவ உதவிகளையும் தமது அரசு வழங்கும் என்றும் திரு. **Vishnu Deo Sai** தெரிவித்தார்.

**>>>><<<<**

தேசிய ஜனநாயக கூட்டணியை பலவீனப்படுத்தும் எந்த நடவடிக்கைகளிலும் ஐக்கிய ஜனதா தளம் ஈடுபடாது என்று அக்கட்சியின் செய்தி தொடர்பாளர் திரு. **K.C. Tyagi** கூறியுள்ளார்.

செய்தி நிறுவனத்திற்கு அளித்துள்ள பேட்டியில் இதனை தெரிவித்த அவர், மக்களவை தலைவர் தேர்தல் தொடர்பாக எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி தவறான அறிக்கைகளை வெளியிடுவதாக குற்றம் சாட்டினார்.

ஐக்கிய ஜனதா தளம் மற்றும் தெலுங்கு தேசம் கட்சியை பிளவுபடுத்தும் நடவடிக்கைகளில் பிஜேபி ஈடுபடும் என்ற எதிர்கட்சிகளின் குற்றச்சாட்டினை திட்டவட்டமாக அவர் நிராகரித்தார்.

பிஜேபி இதுபோன்ற செயல்களில் எப்போது ஈடுபட்டதில்லை என்றும் திரு. **K.C. Tyagi** கூறினார்.

**>>>><<<<**

தில்லியில் நிலவிவரும் குடிநீர் தட்டுப்பாடு பிரச்சினைக்கு ஆம் ஆத்மி அரசு உரிய தீர்வு காணவில்லை என்று கூறி, பிஜேபி சார்பில் இரண்டாம் நாளாக இன்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

புதுதில்லி மக்களவை தொகுதி உறுப்பினர் செல்வி. **Bansuri Swaraj** தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஏராளமானோர் பங்கேற்றனர்.

**>>>><<<<**

சென்னை அகில இந்திய வானொலி, 86 ஆண்டுகளை பூர்த்தி செய்து, 87வது ஆண்டில் இன்று அடியெடுத்து வைத்துள்ளது.

இதனையொட்டி அகில இந்திய வானொலியில் சிறப்பு நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டு வருகின்றன.

87வது ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ள சென்னை அகில இந்திய வானொலிக்கு திரைப்பட இயக்குநரும், நடிகருமான தம்பி ராமையா வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

(சவுண்ட் பைட் ராமையா 15 செகண்ட்ஸ்)

வானொலி, தமது வாழ்க்கையில் ஒரு அங்கமாக உள்ளது என்று நடிகர் மதன்பாபு தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - மதன்பாபு 50 செகண்ட்ஸ்)

**>>>><<<<**

சர்வதேச யோகா தினம் வரும் 21ஆம் தேதி கொண்டாடப்படுவதை ஒட்டி, பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

வெளிநாடுகளில் உள்ள இந்திய தூதரகங்கள் சிறப்பு யோகா பயிற்சி வகுப்புகளையும், நிகழ்ச்சிகளையும் நடத்தி வருகின்றன.

இங்கிலாந்தில் உள்ள இந்திய தூதரகம் சார்பில் லண்டனில் நடைபெற்ற யோகா தின சிறப்பு நிகழ்ச்சியில் 700க்கும் மேற்பட்டோர் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

பிரம்மகுமாரிகள் அமைப்பின் சார்பில் மதுரை காந்தி அருங்காட்சியக வளாகத்தில் இன்று நடைபெற்ற யோகா நிகழ்ச்சியில் ஏராளமானோர் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - ரகுராஜா 43 செகண்ட்ஸ்)

**>>>><<<<**

தமிழகத்தில் மீன்பிடி தடைகாலம் நிறைவடைந்ததை அடுத்து, மீன்வரத்து அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

திருவாரூர் மீன் சந்தையில் பொதுமக்கள் ஆர்வத்துடன் மீன்களை வாங்கிச் சென்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**>>>><<<<**

இந்தியா – தென்னாப்பிரிக்கா இடையேயான முதலாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று பெங்களூருவில் நடைபெறுகிறது.

பகலிரவு ஆட்டமாக நடைபெறவுள்ள இப்போட்டி பிற்பகல் மணி 1.30-க்கு தொடங்குகிறது.

மூன்று போட்டிகளை கொண்ட இந்த தொடரின் இரண்டாவது ஆட்டம் வரும் புதன்கிழமையும், மூன்றாவது மற்றும் இறுதிப்போட்டி வரும் 23ஆம் தேதியும் நடைபெறவுள்ளது.

**>>>><<<<**

சிங்கப்பூர் சர்வதேச நீச்சல் போட்டியில், இந்தியா இரண்டு தங்கப்பதக்கங்களை வென்றது.

ஆடவர் 200 மீட்டர் பிரிவில், **Sajan Prakash-**ம், ஆயிரத்து 500 மீட்டர் பிரிவில் **Kushagra Rawat-**ம் தங்கப்பதக்கம் வென்றனர்.

இப்போட்டியில் இந்தியா இரண்டு தங்கம், மூன்று வெண்கலப்பதக்கங்களை வென்றது.

**>>>><<<<**

பிரிக்ஸ் விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா வெண்கலப்பதக்கம் வென்றது.

ரஷ்யாவின் **Kazan–**ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் டேபிள் டென்னிஸ் பிரிவில் இந்தியா இப்பதக்கத்தை கைப்பற்றியது..

**>>>><<<<**

கிரீஸின் **Nikaia-**வில் நடைபெற்று வரும் சர்வதேச தடகள சாம்பியன் போட்டியில், இந்தியாவின் **Praveen Chithravel** வெண்கலப்பதக்கம் வென்றார்.

ஆடவர் **Triple Jump** பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

**>>>>END<<<<**